சிவசிவ

திருச்சிற்றம்பலம்

# மலேசிய சைவ சமயப் பேரவை நடத்தும்

## நான்காம் ஆண்டு திருமுறைப் பெருவிழா – 2018

## திருமுறை ஓதும் போட்டிக்கான பாடல்கள்

## பிரிவு 1 - வயது 5 முதல் 7 வரை

<u>பாடல் : 1</u>

தலம் : சீகாழி — திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது
பண்: தக்கராகம் — தாளம்: ரூபகம்

பூவார் கொன்றைப் புரிபுன் சடையீசா
காவாய் என நின்று ஏத்துங் காழியார்
மேவார் புரமூன்று அட்டார் அவர் போலாம்
பாவார் இன்சொல் பயிலும் பரமரே 1.24.1

பாடலின் பொருள் :

திருமுறைப் பாடல்களின் பொருளாய் அவற்றில் கலந்திருக்கும் சிவபெருமான் தன்னை இகழ்ந்த மூன்று அரக்கர்கள் இயக்கி வந்த கோட்டைகளையும் அவர்களின் ஆணவத்தையும் அழித்து அவர்களை ஆட்கொண்டான். கொன்றைப் பூக்களைஅணிந்த சடையினை யுடைய இறைவா என்று அன்பர்கள் போற்றும் சிவபெருமான் சீர்காழியைத் தனக்கு இடமாய்க் கொண்டு அங்கு எழுந்தருளியுள்ளான்.

<u>பாடல் : 2</u>

தலம் : திருவன்னியூர் — திருநாவுக்கரசு நாயனார் அருளியது
திருக்குறுந்தொகை — தாளம் : ஆதி

ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெலாம்
தானங் காட்டித் தன் தாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல் வன்னி ஊரரே. 5.26.3

பாடலின் பொருள்:

திருவன்னியூர் என்னும் ஊரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் தன்னை வழிபடுவோர்க்கு சிவஞானம் ஊட்டி, சிவ நெறியைக் காட்டி இறுதியில் சிவ முத்தியும் தருவார். சிவபெருமானின் அருள் பெற்ற அடியார்க்குச் சிவ உலகங்களை ஆளும் அதிகாரமும் அருள்வார்.

<u>பாடல் : 3</u>

தலம் : திருஆப்பனூர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது
பண் : குறிஞ்சி தாளம் : ஆதி

தகர மணியருவித் தடமால் வரைசிலையா
நகரம் ஒரு மூன்றும் நலங்குன்ற வென்றுகந்தான்
அகர முதலானை அணி ஆப்பனூரானைப்
பகரும் மனம் உடையார் வினை பற்றறுப்பாரே. 1.88.5

பாடலின் பொருள்:

மணப்பொருள்களும் மாணிக்கம் போன்ற மணிகளும் கலந்து வரும் அருவிகளை உடையது மேரு மலை. அம்மலையை வில்லாக வளைத்து அரக்கர்களின் மூன்று கோட்டைகளை அழித்தார் சிவபெருமான். அகரம் முதலிய எழுத்துகள் அனைத்திலும் கலந்து இருக்கும் பெருமான் திருஆப்பனூரில் எழுந்தருளியுள்ளான். அவனைப் போற்றுவோர் வினையால் வரும் துன்பங்களை அடைய மாட்டார்.